பக்கங்கள்: 09

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 05 செவ்வாய்க்கிழமை 22.08.2023 கதிர் 284

# வடக்கு கிழக்கில் வெப்பநிலை வரும் நாட்களில் உச்சம் தொடும்

## வளிமண்டவியல் திணைக்களம் எச்சரிக்கை

இலங்கையின் வடக்கு,கிழக்கு உட்பட பல்வேறு பகுதிகளில் வரும் நாட்களில் வெப்பம் உச்சம் தொடக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள அறிவிப்பின்படி, வடக்கு, வடமத்தி, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களுக்கும் அம்பாந்தோட்டை மாவட்டத்துக்கும் அதிக வெப்பம் காணப்படப்போகின்றது.

தென்மேல் பருவமழை உருவாகுவதற்கான காலநிலை இன்னும் ஏற்படாத காரணத்தால் இந்த நிலமை என்றும அவ

மனித உடலால் உணரப்படும் வெப்பமானது குறித்த பகுதிகளில் வாழும் மக்களுக்கு மேலும் செறிவான அளவில் வெப்பத்தை உணரக்கூடியாக இருக்கும். ஆகவே, பொது மக்கள் அவதானமாக இருக்க வேண்டும்.

குறித்த பிரதேசங்களில் வசிப்ப ☞2

## இது ரகசியம் அல்ல!

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான க.வி.விக்னேஸ்வரன் நேற்று அருந்தப்பு. விபத்து ஒன்றிலிருந்து நூலிழையில் உயிர் தப்பினார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நாடாளுமன்றஉறுப்பினர்விக்னேஸ்வரன் கொழும்பிலுள்ள தனது வீட்டுக்குச் சென்று வாகனத்தைவிட்டுஇறங்கிவீட்டுக்குள்காலடி எடுத்து வைத்தபோது அவரது காரின் மீது வீட்டு போர்ட்டிக்கோ இடிந்து வீழ்ந்துள்ளது.

ஒரு சிறு வாய்ப்பில் உயிர் தப்பிய முதலமைச்சர் காயங்கள் ஏதுமின்றி ஆரோக்கியமாக இருக்கின்றார் என்று தெரிவிக்கப்படுகின்றது. அவரது வாகனம் பலத்த சேதமடைந்தது.

வாகனத்தைவிட்டிறங்கிய முன்னாள் முதல்வர்வீட்டுக்குள்தனதுகாலடியைஎடுத்து வைத்தபோது, "மடார்....." என்ற பெரும் சத்தத்துடன் மேலிருந்து போர்ட்டிக்கோ வாகனம் மீது நொருங்கி வீழ்ந்தது என்று தெரிவித்தார்கள்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் சேர்ந்து ☞2

## பங்களாதேஷ் தந்த கடனில் கால்வாசி செலுத்தப்பட்டது

பங்களாதேஷிடமிருந்து 2021ஆம்ஆண்டு நாணய மாற்றுஆ; பொறிமுறையின் கீழ் பெற்றுக்கொண்ட 200 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கடனில் 50 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மீளச் செலுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷ் வங்கியின் நிர்வாக பணிப்பாளரும் ஊடகப் பேச்சாளருமான மெஸ்பால் ஹக் இது தொடர்பில் தெரிவித்துள்ளதாவது,

கடந்த 17 ஆம் திகதி இலங்கையிடமிருந்து 50மில்லியன் டொலர்கள் தொகை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இந்த தொகையானது நாட்டின் அந்நிய செலாவணி கையிருப்பை அதிகரித்துள்ளது. ☞2

## சுகாதார அமைச்சருக்கு ஆதரவளிக்க பெரமுன எம்.பிக்கள் பலர் தயாராம்

ஐக்கிய மக்கள் சக்தி எனக்கு எதிராகக் கொண்டு வந்திருக்கும் நம்பிக்கையில்லா பிரேரணையை தோற்கடிப்பதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர்களில்பலர்ஆதரவளிக்க இணக்கம்தெரிவித்துள்ளனர் என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அவருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய மக்கள் சக்தியினால் சபாநாயகருக்கு கையளித்திருக்கும் நம்பிக்கையில்லா பிரேரணையை தோற்கடிப்பதற்காக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் எனக்கு ஆதரவளிப்பதற்கு இணக்கி இருக்கிறார்கள். ஏனெனில்நம்பிக்கையில்லா பிரேரணையில் தெரிவிக்கப்பட்டிருக்கும்காரணங்கள் அனைத்தும் உண்மைக்கு புரம்பானவை என்பது தற்போது விஞ்ஞான ரீதியில் ஒப்புவிக்கப்பட்டுள்ளது.

நம்பிக்கையில்லா ☞2

## கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியை தோண்டுவதற்கான நிதி ஏற்பாடுகள் தயார்

### செப். 4 பணிகள் தொடங்கலாம்

(ந.லோகதயாளன்.)

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியைத் தோண்டுவதற்கான செலவு நீதி அமைச்சின் ஊடாக வழங்கப்படவுள்ளது. இதையடுத்து செப்டெம்பர் 4 புதைகுழியைத் தோண்டும் பணிகள் தொடங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

தேவைப்படும் நிதி நீதி அமைச்சினால் காணாமற் போனோர் தொடர்பான அலுவலகத்திற்கு வழங்கப்பட்டு மாவட்டச் செயலகத்திற்கு விடுவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. நிதி கிடைத்திருப்பதை அடுத்து ஒக்டோபர் 31 வழக்குத் தவணையின் போது ஆராயப்பட்டு செப். 4 தோண்டும் பணிகளைத் தொடங்குவதற்குத் திட்டமிடப்படுகின்றது.

புதைகுழியைத் தோண்டும் செலவில் முதல் கட்டமாக 5 மில்லியன் ரூபாவை வழங்க நீதி அமைச்சு இணக்கம் தெரிவித்துள்ளது.

இதேநேரம் குறித்த புதைகுழ விவகாரம் ஐ.நா. மற்றும் செஞ்சிலுவைச் சர்வதேசச் சங்கங்களின் கவனத்தையும்பெற்றிருக்கும் நிலையில் ஐ.நா. இதற்கான நிதி அனுசரணையை வழங்க அரசுடன் இணக்கம் கண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## நல்லூரில் தேநீர் விலை ரூபா 200






நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திற்குமுன்பாகஉள்ள சைவ உணவகம் ஒன்றில்

ஒரு கோப்பை பால் தேநீர் 200 ரூபாய்க்கு விற்கப்படுவதாக மக்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவபெருவிழாவினை முன்னிட்டு திறக்கப்பட்டுள்ள உணவகத்திலேயே இந்த விலைஉயர்வுஎன்றுமக்கள் குறைப்பட்டனர்.

இந்நிலையில் இன்று காலை கொடியேற்ற உற்சவத்துக்கு சென்ற மக்கள் சிலர் அங்கு பால் தேநீர் பருக சென்றபோது ஒரு கோப்பை பால்தேநீர் 200 ரூபாய் என்ற விலையைக் கேட்டு அதிர்ந்து போய்விட்டனர்.

பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட காலத்தில்கூட ☞2

## இன்டர்போல் பொலிஸாரினால் 2 இலங்கையர் ஓமானில் கைது

### போதைப் பொருள் வியாபாரிகள்

(ந.லோகதயாளன்.)

இலங்கையைச்சேர்ந்த போதைப் பொருள் கடத்தல் மற்றும்விற்பனையாளர்கள் இருவர் இன்டர்போல் பொலிஸாரால் ஓமானில் கைது செய்யப்பட்டு இந்தியாவிற்குக்கொண்டுசெல்லப் படுகின்றனர்.

இலங்கையைச்சேர்ந்த கணேமுல்ல சஞ்சீவ், கோத்த அசங்க ஆகிய இருவருமே இவ்வாறு இந்தியாவிற்குக் கொண்டு செல்லப்படுகின்றனர்.

இலங்கையில்போதைப் பொருள் கடத்தல் மற்றும் விற்பனைக்குற்றச்சாட்டுக்கு உள்ளான இவர்கள் இந்தியாவிற்குத் தப்பிச் சென்று, அங்கும் போதைப் பொருள் கடத்தல் குற்றங்களில் ஈடுபட்ட நிலையில் இந்திய அதிகாரிகளால் தேடப்பட்டு வந்தனர்.

அவர்களைக் கைது செய்வதற்கான சர்வதேசப் பிடியாணையையும் இந்தியா பிறப்பித்திருந்தது. இந்தியாவில் இருந்து தப்பிச் சென்ற அவர்கள் இருவரையும் இன்டர்போல் பொலிஸார் ஓமானில் கைது செய்தனர்.

இருதினங்களிற்கு முன்னர் கைது செய்யப்பட்ட அவர்கள் இந்திய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப் படவுள்ளனர். இன்று அல்லது நாளை ☞2

## மன்னாரில் கேட்ட 30,000 ஏக்கர் நிலத்தில் 5 ஆயிரத்தை மட்டுமே விடுவிக்கத் தயார்

### வனவள மற்றும் வன உயிரிகள் திணைக்களங்கள் தெரிவிப்பு

(ந.லோகதயாளன்.)

மன்னார் மாவட்டத்தில் வனவளத் திணைக்களம் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களங்களின் பிடியில் உள்ள 26 ஆயிரத்து 627 ஏக்கர் மக்கள் பயன்பாட்டு நிலத்தையும் 4 ஆயிரத்து 393 ஏக்கர் மேய்ச்சல் தரவைக்குரிய நிலத்தையும் விடுவிக்குமாறு கேட்கப்பட்டபோதும், அவற்றில் 5 ஆயிரத்து 459 ஏக்கரை விடுவிக்க மட்டுமே இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போருக்குப் பின்னர் வடக்கு மாகாணத்தில் வனவள மற்றும் வன உயிரிகள் திணைக்களத்தினர் தன்னிச்சையாக மக்கள் பயன்பாட்டு நிலங்களையும் உள்ளடக்கி காடுகளாக வர்த்தமானி அறிவித்தல்களை வெளியிட்டுள்ளனர். இது தொடர்பில் தொடர்ச்சியாகத் தெரிவிக்கப்பட்டு ☞2

## 13க்கு தெற்கில் எதிர்ப்பு வலுப்பு அதன் அமுலாக்கம் பிரச்சினைதான்

### குத்துக்கரணம் அடிக்கிறார் ஜி.எல். பீரிஸ்

அரசமைப்பின் 13ஆவது திருத்தம் குறித்து ஜனாதிபதி விசேட உரையாற்றியதன் பின்னர் தென்னிலங்கையில் 13 ஆவது திருத்தத்துக்கு எதிரான எதிர்ப்புகள் வலுப்பெற்றுள்ளன. ஆகவே 13 ஆவது திருத்த அமுலாக்க முயற்சிகள் இறுதியில் முரன்பாடுகளை மாத்திரம் தோற்றுவிக்கும்.

பொதுஜனபெரமுனவின் ஆதரவு இல்லாமல் பாராளுமன்றத்தில் எந்த தீர்மானத்தையும் நிறைவேற்ற முடியாது என்பதை ஜனாதிபதி நன்கு அறிவார். 13 திருத்த அமுலாக்க முயற்சிகள் இறுதியில் முரண்பாடுகளை மாத்திரம் தோற்றுவிக்கும் எனபாராளுமன்றஉறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

நாவல பகுதியில் உள்ள சுதந்திர மக்கள் சபை காரியாலயத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்து உரையாற்றியபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும்தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியலமைப்பின் 13 ஆவது திருத்த அமுலாக்கம் பற்றி நாடாளுமன்றத்தில் விசேட உரை நிகழ்த்தினார். ☞2

## வரலாற்றில் இல்லாத பெரும் கூட்டணியை அமைக்க ஐக்கிய மக்கள் சக்திக்கு அனுமதி



இலங்கையின் வரலாற்றிலேயே மிகப் பெரும் கூட்டணி ஒன்றை அமைப்பதற்குஐக்கியமக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனுமதி வழங்கியுள்ளனர்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். அடுத்த வருடம் நடைபெற உள்ள தேர்தலை எதிர்கொள்வது குறித்து இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் உட்படப் பல தேர்தல்களும் அடுத்த ஆண்டு நடத்தப்பட இருப்பதால் அதனை எதிர்கொள்வதற்கான வியூகங்களை வகுப்பதில் கட்சிகள் அக்கறை செலுத்தி வருகின்றன. அந்த வகையில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டம் நேற்று நடத்தப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில் வரலாற்றில் இல்லாத அளவிற்கு மிகப் பெரும் கூட்டணி ஒன்றை அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது. ஐக்கியமக்கள் சக்தியின் தலைமையில் அமையவுள்ள இந்தக் கூட்டணியில் கட்சியின் அடையாளத்தைப் பாதுகாத்தபடிபுதியகூட்டணியை ☞2

## பல அரசியல் கட்சிகள் தோன்றியதும் நாட்டின் தோல்விக்கு முக்கிய காரணம்

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து 1952 இல் பண்டாரநாயக்கபிரிந்துசென்றமை மற்றும் பல்வேறு கால கட்டங்களில் அரசியல் கட்சிகள் பிளவுபட்டு புதிய அரசியல் கட்சிகள் தோற்றம் பெற்றன. அதனால் இன்று 75 அரசியல் கட்சிகள் உருப்பெற்றுள்ளன. இதுவும் நாட்டின் வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக அமைந்தது என்று ஐக்கிய தேசிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வஜீர அபேவர்த்தன தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறுதெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது: சுதந்திரத்தின்போது ☞2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

பணியாற்றிவரும்நிலையில் இந்த விபத்து பெரும் அதிர்வலையைக் கிளப்பியுள்ளது.

உயர்நீதிமன்றநீதியரசரான விக்னேஸ்வரனை 2013 வடக்கு மாகாண சபைத் தேர்தலின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியலுக்கு இழுத்து வந்தது. எனினும் அவரை அரசியலுக்கு அழைத்து வந்ததமிழ் அரசுக்கட்சியின் அரசியல்நிலைப்பாட்டிலிருந்து விலகிதனியான அரசியலை முன்னெடுக்க முயன்ற அவர் கட்சியுடன் முரண்பட்டதைத் தொடர்ந்து பதவியில் இருக்கும்போதே கடும் நெருக்கடியை எதிர் கொண்டவர்.

அதனால்அவரைஅப்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் புளொட், ரெலோ, ஈபிஆர்எல்எவ் கட்சிகள் தாங்கிப் பிடித்தன. இந்தக் கட்சிகளுடன் சில தனிநபர்களும் இணைந்துகொண்டு தமிழ் மக்கள் பேரவை என்ற அமைப்பை உருவாக்கி அவரை அதன் தலைவராக்கினர். இதன் மூலம்ஓர்அரசியல்தலைவர் என்ற அவரை உயர்த்தின. அதன் விளைவாக முதலமைச்சர் பதவிக் காலத்தை முடித்ததும் தமிழ் மக்கள் கூட்டணி என்கிற கட்சியை உருவாக்கிய அவர், அதற்கூடாகநாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றார்.

ஆழ்ந்த சைவப் பற்றும் தமிழ் வளமும் கொண்டவரான முதலமைச்சர் தனது காலத்தில் முடிந்தவற்றை ஆட்சியாளர்களிடம் இருந்து தமிழ் மக்களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கான அரசியலை தற்போது முன்னெடுத்து வருகின்றார். அதற்காக அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தைப் பலப்படுத்தி அதனை நடைமுறைப்படுத்துவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் நெருக்கமாகப் பணியாற்றி வருகின்றார். 13ஐப் பெற்றுப் படிப்படியாக முன்னேறி சமஷ்டியைநோக்கிநகரலாம் என்பது அவரது அரசியல் நிலைப்பாடாக உள்ளது. எல்லாக் கட்சிகளும் சமஷ்டியைக்கேட்டாலும்அதனை அடைவதற்கான வழி அவற்றுக்குத் தெரியாது என்றும்அந்த வழிதனக்கும் தெரியாது என்பதால் இப்படிப் படிப்படியாக முன்னேறிச்செல்லலாம் என்றும் அண்மையில் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்திருந்தார்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்கள் போதுமானஅளவு நீரைபருகுவதுடன், ஓய்வாக இருப்பதும் அவசியமாகும். குழந்தைகளை தனியாக வாகனங்களில் விட்டுச் செல்வதை தவிர்க்க வேண்டியதும் அவசியமாகும்.

அத்துடன், வெப்பகாலநிலையினை சமாளிப்பதற்கு மக்கள் வெள்ளை அல்லது இளம் நிறங்களில் ஆடைகளை அணிவது பொருத்தமானது - என்றுள்ளது.

## சுகாதார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரேரணைக்கு உள்வாங்கி இருக்கும் பிரதான குற்றச்சாட்டான தரமற்ற மருந்து கொண்டுவந்தமை மற்றும் மருந்து ஒவ்வாமை காரணமாக நோயாளர்கள் மரணித்தார்கள் என்ற விடயங்கள் தற்போது சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட விசேட வைத்திய நிபுணர்களின் பங்குபற்றலுடன் நியமிக்கப் பட்டிருக்கும்தொழிநுட்பகுழுவினால் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன.

அத்துடன் குறித்த குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை எனவும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் எனக்கு அறியத்தந்தார்கள்.

அதனால் எனக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை விரைவாக விவாதித்துவாக்களிப்பதற்காக சபாநாயகரிடம்திகதிஒன்றை பெற்றுக்கொள்ளுமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவிடம் கேட்டுக்கொள்கிறேன்.

நம்பிக்கையில்லாபிரேரணையொன்று முன்வைக்கப்பட்டால் அதற்கு முன்னுரிமை வழங்குவது பாராளுமன்றத்தின்சம்பிரதாயமாகும். எதிர்க்கட்சித் தலைவர் அந்த சம்பிரதாயத்தை மீறி நம்பிக்கையில்லா பிரேரணையை விவாதத்துக்கு எடுத்துக் கொள்வதை காலம் கடத்தி வருகிறார் -என்றார்.

## வரலாற்றில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைக்கப்படவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## பங்களாதேஷ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன், இந்த மாத இறுதிக்குள் இரண்டாவது தவணை கடன் தொகையினை இலங்கையிடமிருந்து எதிர்பார்க்கின்றோம். இரண்டாவது தவணைக்கான தொகை குறித்து தற்போது குறிப்பிட முடியாது.

2021ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் பொருளாதார நெருக்கடிநிலைமைகளினால் இன்னல்களுக்கு உள்ளாகி இருந்த நிலையில், பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பும் வகையில் பங்களாதேஷ் அந்நிய செலாவணிஇருப்பில்இருந்து 200 மில்லியன் அமெரிக்க டொலர்கடனைஇலங்கைக்கு வழங்கியது - என்றார்.

முன்னதாக கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதத்துடன் குறித்த கடன் தொகையை மீள அளிப்பதற்காக வழங்கப்பட்ட காலம் நிறைவடைந்ததோடு, இவ்வருடம் மார்ச் மாதம் வரை இரண்டு தடவைகள் கடனை மீள செலுத்தும் காலம் நீடிக்கப்பட்டது.

கடன்மீளசெலுத்தப்படாத நிலையில் இறுதியாக கடனைமீளசெலுத்துவதற்கு செப்டெம்பர் மாதம் வரை மேலும் ஆறு மாதகாலம் அவகாசம்வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## நல்லூரில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருகோப்பைபால்தேநீர்இவ்வளவு விலைக்கு விற்கப்படவில்லை என்று அவர்கள் கூறினர். அந்த உணவகம் நட்சத்திரவிடுதியோ, சொகுசு உணவகமோ அல்ல என்ற போதும்இவ்வளவு உயர்வான விலைக்கு உணவுப் பண்டங்கள் விற்கப்படுவது பக்தர்களைஅதிர்ச்சியடையச் செய்துள்ளது.

இது குறித்து நுகர்வோர் அதிகார சபை நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

## இன்டர்போல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் விமானம் மூலம் சென்னைக்கு அழைத்துவரப்பட்டு இந்திய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படுவத் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## மன்னாரில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்த முறைப்பாடுகளைத் தொடர்ந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 1985 ஆம் ஆண்டிற்கு முன்பு இருந்த காடுகளின் எல்லைகளுக்கு மீளத் திரும்புவது என்கிற கொள்கை முடிவை எடுத்தார்.

அதனடிப்படையில் விடுவிக்கப்படக்கூடிய நிலங்களை அடையாளம் காணும் பணிகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் இடம்பெற்றது. வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இது தொடர்பான கூட்டங்கள் நடத்தப்பட்ட நிலையில் மன்னார் மாவட்டத்துக்குரிய கூட்டமும் அண்மையில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்டத்தில் வனவளத் திணைக்களம் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களங்களின்பிடியில் இருக்கும் 26 ஆயிரத்து 627 ஏக்கர் மக்கள் பயன்பாட்டு நிலங்களையும் மேய்ச்சல் தரவைக்காக 4 ஆயிரத்து 393 ஏக்கர் நிலத்தையும் விடுவிக்குமாறுகோரப்பட்டது.

ஆனால் இதில் 5 ஆயிரத்து 459 ஏக்கர் நிலத்தை மட்டும் விடுவிக்க இந்த இரு திணைக்களங்களும் இணக்கம்தெரிவித்துள்ளன. மேய்ச்சல் தரை நிலம் தொடர்பிலான கோரிக்கையை தேசிய குழுவிற்கு சமர்ப்பிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுவிக்கக்கோரப்படும் எஞ்சிய நிலம் தொடர்பில் மீண்டும்கூடி ஆராய்வதற்கு இணக்கம்தெரிவிக்கப்பட்டது. இக் கலந்துரையாடலில் பங்குகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான காதர் மஸ்தான் மற்றும் ரிசாட் பதியுதான் போன்றோர் ஏனைய பிரதேசசெயலாளர் பிரிவில் சில இடங்களேனும் விடுவிக்கப்பட்டபோதும் முசலிப் பிரதேச செயலாளர் பிரிவில் 11 இடங்கள் கோரப்பட்டபோதும் ஒரே யொருஇடம்மட்டுமேவிடுவிக்கப்பட இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது எனச் சுட்டிக் காட்டினர்.

## பல....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனைத்து இலங்கை அரசியல் கட்சிகளும் ஒற்றுமையாக செயற்பட்டதால் டி.எஸ்.சேனநாயக்க, 98 ஆசனங்களில் 42 ஆசனங்களைப் பெற்று தோற்கடிக்கப்பட்டாலும், வடக்கின் தமிழ் தலைவர்களின் ஒற்றுமையின் காரணமாக, சேர் பொன். அருணாசலம், பொன். இராமநாதன் மற்றும் சம சமாஜ, கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் இலங்கையின் சுயேச்சைக் குழுக்களின் தலைவர்கள் இணைந்து, டி.எஸ்.சேனநாயக்கவை இலங்கைப் பிரதமராக்கினர்.

இந்த ஒற்றுமையின் காரணமாகவேநாடுசுதந்திரம் அடைய முடிந்தது. பின்னர் 1952 இல் பண்டாரநாயக்க பிரிந்து சென்றமை மற்றும் பல்வேறு காலகட்டங்களில் அரசியல்கட்சிகள்பிளவுபட்டு புதிய அரசியல் கட்சிகள் தோற்றம்பெற்றன. அதனால் இன்று 75 அரசியல் கட்சிகள் உருப்பெற்றுள்ளன. இதுவும் நாட்டின் வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக அமைந்தது.

அரசியல்கட்சிகள் தங்களுக்கிடையிலான போட்டிக்காக அள்ளிவீசிய வாக்குறுதிகளின் பலனாக நாடு வங்குரோத்து நிலைக்குத் தள்ளப்பட்டது. இறுதியில் நாடாளுமன்றத்தின் 225 பேரையும் நாட்டு மக்கள் நிராகரித்த வேளையில் கடந்த மே மாதம் 12ஆம் திகதி பிரதமராகவும், கடந்த ஜூலை 20ஆம் திகதி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகவும் பதவியேற்றஜனாதிபதிரணில் விக்கிரமசிங்க, வீழ்ந்துகிடந்த நாட்டைசீரமைத்து, தன்னை ஒரு தேசிய தலைவராக நிரூபித்துக்காட்டிநாட்டையும், தேசத்தையும் பாதுகாக்க முன்வந்துள்ளார்.

அவரது அரசியல் அனுபவத்தைப் பார்க்கும் போது, அவர் முன்னாள் ஜனாதிபதிகளான, ஜே.ஆர். ஜயவர்தன, ரணசிங்க பிரேமதாச, சந்திரிகா குமாரதுங்க, மைத்திரிபாலசிறிசேன ஆகியோருடனும் பணியாற்றியுள்ளதோடு தற்போது பொதுஜன பெரமுனவுடனும் இணைந்து செயற்படுகிறார்.

பொருத்தமானவர்கள் மற்றும்பொருத்தமற்றவர்கள் என அனைத்து தரப்பினர்களுடனும் இணைந்து பணியாற்றும், அவர்களை ஒன்றிணைக்கும்இயலுமை ரணில்விக்ரமசிங்கஎன்னும் தலைமையிடம் உள்ளது. அவரின் அனுபவங்களை தேசிய நலனுக்காக பயன்படுத்திக்கொள் வதற்கான சந்தர்ப்பம் உருவாகியுள்ளது. அதேபோல், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கபொதுமக்களின்பாதுகாப்பிற்காக ஒரு வருட குறுகிய காலப்பகுதியில்பெருமளவான சட்டத் திருத்தங்களை பாராளுமன்றத்தில்கொண்டு வந்துள்ளார்.

அரசியல் களத்தில் அதிகாரத்தைப்பெறுவதற்காக ஒருவரைஒருவர்திருடர்என்று வசைபாடிக் கொண்டிருக்கும் கலாசாரத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காகவே ஊழல் தடுப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதன்மூலம், மிக சக்திவாய்ந்த ஊழல் தடுப்புச் சட்டத்தைபாராளுமன்றத்தில் நிறைவேற்றி, அதை சட்டமாக்கி, நாட்டை சரியான பாதைக்கு வழிநடத்தி வருகிறார்.

இந்த நாட்டின் வங்குரோத்து நிலைக்கு காரணமான இரண்டு பிரதான நிறுவனங்களான நிதிய மைச்சு மற்றும் இலங்கை மத்திய வங்கி ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் மறுசீரமைப்பு முழு அரச பொறிமுறையிலும் செய்யப்பட வேண்டும். மறுசீரமைப்புசெயல்முறைபாராளுமன்றத்தின்ஊடாகமக்களுக்கு வெளிப்படுத் தப்படுகிறது.

அத்துடன், உலகில் ஊடகங்கள் தொடர்பான சட்டங்களைபார்க்கும்போது, உதாரணமாக, சிங்கப்பூரின் தகவல் தொடர்பு ஊடக மேம்பாட்டு ஆணையச் சட்டம் மிகவும் சக்திவாய்ந்த ஒன்று. இலங்கையில் இது வரையில் இவ்வளவு சக்திவாய்ந்த சட்டமூலம் முன்வைக்கப்படவில்லை என்பது குறித்து நாம் உண்மையில் வருத்தப்பட வேண்டும்.

சிங்கப்பூரின் தகவல் மற்றும் தொடர்பு ஊடக மேம்பாட்டு ஆணைக்குழு சட்டத்தில் மிக முக்கியமான பல உட்பிரிவுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. ஊடகத்தை வளர்ப்பதற்காக, அது உலக அங்கீகாரம் பெற்ற பிபிசி ஊடகமாக இருக்கலாம் அல்ஜசீரா ஊடகமாக இருக்கலாம், இல்லையெனில் சி.என்.என். ஊடகமாக இருக்கலாம். இலங்கை ஊடகங்களை அவ்வாறான ஊடகமாக மாற்றுவதற்கு, இலங்கைக்கு ஊடகச்சட்டம் தேவை. இவ்வாறான நிலையில், ஒலிபரப்பு அதிகாரசபைசட்டம்போன்ற முக்கியமான சட்டமூலம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட போது, ஒழுக்கத்தை மதிக்க விரும்பாத குழுக்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தாலும், ஒட்டுமொத்த இலங்கை மக்களும் ஒழுக்கமான சமூகமாக வாழும் உரிமையை ஏற்றுக்கொண்டுள்ளனர் -என்றார்.

## 13க்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசலமைப்பு மாற்றம், புதிய சட்ட உருவாக்கம், புதிய நிர்வாக ஒழுங்கு விதிகள் உருவாக்கம், புதிய நிறுவனங்கள் ஸ்தாபித்தல் மற்றும்உறுப்பினர்நியமனம் குறித்து குறிப்பிட்டார்.

தேசியநல்லிணக்கத்தை உறுதிப்படுத்த வேண்டுமாயின் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்தவேண்டும்என்று ஜனாதிபதி குறிப்பிடுகிறார்.

ஆனால்ஆளும்தரப்பின் பிரதான அரசியல் கட்சியான பொதுஜன பெரமுன 13 ஆவது திருத்தம் குறித்து ஜனாதிபதியின் நிலைப்பாட்டுக்கு எதிர்மறையான நிலைப்பாட்டை கொண்டுள்ளார்.

13 ஆவது திருத்தம் குறித்து ஜனாதிபதி விசேட உரையாற்றியதன் பின்னர் தென்னிலங்கையில் 13 ஆவதுதிருத்தத்துக்குஎதிரான எதிர்ப்புகள் வலுப்பெற்றுள்ளன. ஆகவே 13 ஆவது திருத்தஅமுலாக்கமுயற்சிகள் இறுதியில் முரன்பாடுகளை மாத்திரம் தோற்றுவிக்கும்.

அரசமைப்பின்13ஆவது திருத்தத்தை அமுல்படுத்த முன்னர் மாகாண சபைத் தேர்தலைநடத்த வேண்டும் என ஜனாதிபதியிடம் வலியுறுத்தினோம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உட்பட அரசாங்கம் மக்கள் மத்தியில் செல்ல அச்சமடைந்துள்ளதால் தேர்தல் வாக்கெடுப்பு தொடர்பில் இதுவரை முன்னேற்றகரமான எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.மாகாணசபைத் தேர்தலை நடத்தாமல் அதிகாரபகிர்வு குறித்துபேச்சுவார்த்தையில் ஈடுபடுவது பயனற்றது.

ஆளும்தரப்பின்தவறான பொருளாதார கொள்கையினால் மூளைசாலிகள் நாட்டை விட்டு நாளாந்தம் வெளியேறுகிறார்கள்.

வைத்தியர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், வங்கியியலாளர்கள் உட்பட பிரதான தொழிற்றுறையினர் நாட்டை விட்டு செல்வதால் எதிர்காலத்தில் சமூக கட்டமைப்பு பாரிய நெருக்கடிகளை எதிர்கொள்ளும்.

மூளைசாலிகள் வெளியேற்றத்தை அரசாங்கத்தால் பலவந்தமான முறையில் தடுக்க முடியாது. தொழிற்றுறையினர் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்க ஆட்சியாளர்கள் எந்த நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. மாறாக அவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது - என்றார்.







# ஜனாதிபதியின் செயற்பாடுகளை உடனடியாக நிறுத்தவேண்டும்

## வேலுகுமார் எச்சரிக்கை



தங்களுடைய எதிர்கால அரசியலுக்காக ஜனநாயக விரோத செயற்பாடுகளையே தற்போதைய அரசாங்கம் முன்னெடுத்துள்ளதாகஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளு மன்ற உறுப்பினர் வேலுகுமார் குற்றம் சுமத்தியுள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், நாட்டு மக்களால் ஜனநாயக ரீதியில் புறக்கணிக்கப்பட்ட ஐக்கிய தேசிய கட்சியிலுள்ள குழு வொன்றே ஆட்சியை நிர்வகித்துக் கொண்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதுநாட்டில்பிரதேச சபை இல்லை, மாகாண சபை இல்லை, இருக்கின்ற நாடாளுமன்றத்துக்கும் அதிகாரம் இல்லை இவ்வாறான நிலையில் ஜனநாயகமான நாட்டைஎவ்வாறுஉருவாக்க முடியும் என வேலுகுமார் கேள்வியும் எழுப்பியுள்ளார்.

இந்த நிலையில் மாகாண ரீதியிலான ஆலோசனை சபையை உருவாக்குவதற்கு முயற்சித்து வருகின்றார்கள். இது ஜனநாயகத்துக்கு விரோதமானது செயற்பாடு எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் மக்கள் ஆணை இல்லாத ரணில் விக்கிரமசிங்கவும்பொதுஜன பெரமுன கட்சியின் நாடாளு மன்ற உறுப்பினர்களும் நாட்டை அழிவுப் பாதைக்கு கொண்டுசெல்வதை உடனடியாக நிறுத்த வேண்டும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் வலியுறுத்தியுள்ளார். (05)

# மாத்தளை, ரத்வத்த குடியிருப்புகள் உடைப்புக்கு எதிர்ப்புப் போராட்டம்

மாத்தளை, எல்கடுவ அரச பெருந்தோட்ட நிறுவனத்தின் கீழ் இயங்கும் ரத்வத்த கீழ்பிரிவில் லயன் குடியிருப்பில் வாழும் மக்களின் தற்காலிக குடியிருப்புகளை தோட்ட உதவி முகா மையாளர் அடித்து உடைத்த செயற்பாட்டுக்கு கண்டனம் தெரிவித்து போராட்டம்நடத்தப்பட்டது.வீடமைக்க தோட்ட மக்களுக்கு காணிகளை வழங்கு, ரத்வத்த தோட்ட நிர்வாகத்தின் செயலை வண்மையாக கண்டிக்கின்றோம் என்ற தொனிப்பொருளின் கீழ், பிரதேச மக்களால் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. ரத்வத்தை தோட்ட கீழ்பிரிவுக்குட்பட்ட பகுதியில்,குறித்தகுடியிருப்பில் இருந்த மூன்று குடும்பங்கள் உள்ளடங்களாக 14 பேர் ஒரே லயன் அறையில் தொடர்ந்து வாழ்ந்துள்ள நிலையில் தோட்ட நிர்வாகத்தின் முன்னாள் முகாமையாளரால் இடம் வழங்கப்பட்டிருந்தாக பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையிலேயே தற்காலிககுடியிருப்பொன்றை அமைந்துள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து இவ்வாறு அமைக்கப்பட்ட குடியிருப்பை உடனடியாக அகற்றுமாறு தொடர்ந்து தோட்ட உதவி முகாமையாளரால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட நிலையில் சனிக்கிழமை அடித்து உடைக்கப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர். இந்த நிலையில் இது தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து வினவுவதற்காக நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கு தொடர்பு கொண்ட போதிலும் முறையான பதில்கள் எவையும் கிடைக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மேற்படி விடயத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ் மற்றும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கனேசன் ஆகியோர் கண்டனம் வெளியிட்டுள்ளதுடன் சம்பந்தப்பந்தப்பட்ட அதிகாரிகளுடனும் கலந்துரையாடி உள்ள னர் எனவும் தெரிவித்துள்ளனர். (05)

# தமிழரை ஏமாற்றும் செயல்களை ஜனாதிபதி முன்னெடுத்துள்ளார்

## குமுறுகிறார் கஜேந்திரகுமார்



தமிழ் மக்களின் வாக்குகளை பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போலியான நாடகங்களை முன்னெடுத்துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் குற்றம் சுமத்தியுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தமிழ்க் கட்சிகளின் கோரிக்கைகளுக்கு செவி சாய்ப்பது போன்ற நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ள போதிலும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கு அவர் முன்வரவில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறான நிலையில் சட்டத்தில்ஏற்பாடுகள்இல்லாத மாகாண குழுவொன்றை அமைப்பதற்கான வேலைத் திட்டங்களை ஜனாதிபதி முன்னெடுத்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு சார்பானவர்களை இணைத்துக் கொள்வதற் காகவே மாகாண சபை குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார். (05)

# சர்வதேச அழுத்தத்தால் மட்டுமே இனப்பிரச்சினைக்கு தீர்வு கிட்டும்

## நம்புகின்றார் சுரேஷ் பிரேமச்சந்திரன்

தமிழர்களின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வைப்பெற்றுக்கொடுக்கும் வகையில் சர்வதேசசமூகம், இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம்கொடுக்கவேண்டும் என ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச் சந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழ் மக்கள் இலங்கையில்அச்சமின்றிவாழ்வதற்கு அவர்களின் வாழ்வுரிமை பாதுகாக்கப்படவேண்டும் என்பது தொடர்பில் விளக்கம் அளிக்கும்வகையில்சர்வதேச சமூகம் செயற்படவேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தம் நடைபெற்ற பொழுது தமிழ் மக்களுக்கு சமஷ்டி அடிப்படையிலான தீர்வை வழங்குவதற்குத் தயாராகஇருந்தவர்கள்யுத்தம் முடிந்த பிறகு எதனையுமே கொடுக்கக்கூடாது என்ற நிலைக்கு வருவதாக இருந்தால், அவ்வாறானவர்களுடன் பேசுவதில் அர்த்தம் இல்லை என தோன்றுவதாகவும் தெரிவித்துள்ளார்.

பெரும்பான்மைஅரசியல் தலைமைகளிடையே உள்ள முரண்பாடான நிலைமைகளை சர்வதேச சமூகம் புரிந்துகொள்ளவேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன் வடக்குக்கு பொலிஸ் அதிகாரங்கள், காணி அதிகாரங்களை கொடுத்தால்நாடேபிளவுபடும் எனும்பிழையான இனவாத கருத்துகள் மீண்டும் மீண்டும் திணிக்கப்படுவதாக சுட்டிக்காட்டியுள்ள சுரேஷ் பிரேமச்சந்திரன், நாட்டில் நிரந்தரமான ஒரு பொருளாதார வளர்ச்சி ஏற்பட வேண்டுமாயின், தமிழ் மக்களின் நியாய பூர்வமான உரிமைகள் அனைத்தும் வழங்கப்பட வேண்டும் என்பதை சர்வதேச சமூகம் இலங்கை அரசாங்கத்துக்குத் தெளிவாக எடுத்துரைக்கவேண்டுமென ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் மேலும்வலியுறுத்தியுள்ளார். (05)

# வெங்காயத்தின் விலை உயர காரணம் இந்தியா



வெங்காயத்துக்கு இந்திய அரசாங்கம் 40 வீத ஏற்றுமதி வரியை விதித்ததன் காரணமாகவே வெங்காயத்தின் விலை அதிகரித்துள்ளதாக அகில இலங்கை இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. அகில இலங்கை இறக்குமதியாளர்கள்சங்கம்விடுத்துள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன்இலங்கையில்ஒருகிலோ உப்பின் விலை 50 முதல் 70 ரூபா வரையிலும், ஒரு கிலோ வெங்காயத்தின் சில்லறை விலை 200 முதல் 220 ரூபா வரையிலும் அதிகரித்துள்ளதாகவும் இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில் எதிர்வரும் டிசெம்பர் 31 வரை இந்த வரியை விதிக்க இந்திய அரசாங்கம் தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# கச்சதீவைப் பெற்றதால் பல மடங்கு கடல் விளைநிலங்களை இழந்தோம்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

1976 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை மூலம் கச்சதீவு எமக்குரிய கடற்பரப்பாக அங்கீகரிக்கப்பட்ட நிலையில் நாம் 80 விதமான கடல் விளை நிலங்களை இழக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதாக ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர்நாயகமும்கடற்தொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

தமிழ்நாடு மீனவர்கள் மாநாட்டில் கச்சதீவை மீட்போம் என தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தகருத்துத்தொடர்பில் அவரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இந்தியாவில் தேர்தல் வரப்போகிற நிலையில் அரசியல்நோக்கங்களுக்காக தேர்தல்கள் வரும்போது கச்சதீவு தொடர்பில் கருத்துக்கள் எழுவது வழமையான செயற்பாடு.

1974 ஆம் ஆண்டு இருநாட்டு மீனவர்களும் இலங்கையிலும் இந்தியாவிலும் கடற் தொழிலில் ஈடுபடலாம் என ஓர் உடன்படிக்கைமேற்கொள்ளப்பட்டது.

இந்த உடன்படிக்கை மூலம் இலங்கை கப்பல் கூட்டு தாபனத்தின் பெரிய ஆறு மீன்பிடி படகுகள் இந்தியா கடற்பரப்புகள் சென்று தொழிலில் ஈடுபட்டு வந்தன.

1974 ஆண்டு மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கை 1976 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட நிலையில் இலங்கை மீனவர்கள் இந்தியக் கடற்பரப்புக்குள்ளும் இந்தியா மீனவர்கள் இலங்கை கடற்பரப்புக்குள்ளும்நுழைய முடியாது என உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்த உடன்படிக்கை மூலம் கச்சதீவு கடற்பரப்பிலிருந்து இந்தியா வெளியேறிய நிலையில் இந்தியா மீனவர்களின் மீன்பிடி வலைகளை உலர்த்துவதற்கும் கச்சதீவு அந்தோனியார் திருவிழாவில் பங்கு பற்றுவதற்கும் தடை ஏற்படுத்தப்படுவதில்லை எனத் தீர்மானிக்கப்பட்டது.

1976 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கை மூலம் கச்சதீவு எமக்குரிய கடற்பரப்பாக அங்கீகரிக்கப்பட்ட நிலையில் கச்சதீவைக் காட்டிலும் 80 மடங்கு கடல் விளை நிலங்களைநாம்இழக்கவேண்டிய சூழல் ஏற்பட்டது.

இந்தியா மீனவர்கள் எல்லை தாண்டிய மீன்பிடியால் வடக்கு கடற்தொழிலாளர்கள் தொடர்ச்சியாகப் பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றனர்.

ஆனால் இந்திய தரப்பில் கூறும் போது மீன்பிடிக்கச் சென்ற இந்திய மீனவர்களை சிங்கள இராணுவம் மற்றும் சிங்களக் கடற்படை கைது செய்வதாகப் பிரசாரம் செய்யப்படுகிறது.

நான் இவர்களுடைய பிரசாரத்தின் உண்மைநிலை தொடர்பில் பலமுறை இந்திய மத்திய அரசுக்கும் தமிழ்நாடு அரசுக்கும் எழுத்து மூலமாகவும் வாய்மொழி மூலமாகவும் தெரிவித்துள்ளேன்.

ஆனால் வடபகுதியில் உள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழ்நாடு முதலமைச்சருக்கும் இந்திய பிரதமருக்கும் தமிழ்நாட்டில் இருந்து இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி தொழில் நடவடிக்கையில் ஈடுபடும் இந்திய மீனவர்கள் இலங்கையில் கைது செய்யப்படுகிறார்கள் என்ற உண்மையை அழுத்தமாகத் தெரிவிக்க வேண்டும்.

ஆகவே, கச்சதீவு விவகாரம் தேர்தல்கள் வரும்போது பேசு பொருளாக மாறுவது தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் நிலையில் அதற்கு முற்றுப்புள்ளி வைக்க தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேரில் உண்மை நிலையை தெரிவிக்க வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (05)

# இலங்கை போக்குவரத்துச் சபை நாளாந்தம் ஒருகோடி ரூபா நட்டத்தை எதிர்கொள்கிறது

## அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவிப்பு

இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்களின் சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் வருமானத்தை பகிர்ந்துகொள்வதால் சபை பாரிய நிதி நெருக்கடிக்குள்ளாகியுள்ளது. போக்குவரத்து சபை நாளாந்தம் ஒரு கோடி ரூபா நட்டத்தை எதிர்கொள்கிறது என போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார். கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

இலங்கை போக்குவரத்து சபைக்கு கிடைக்கப் பெறும் நாளாந்த வருமானத்தை அரச பஸ்களின் சாரதிகளும், நடத்துநர்களும் பகிர்ந்துக் கொள்கிறார்கள். இந்த நிதி மோசடியால் இலங்கை போக்குவரத்து சபை பாரிய நிதி நெருக்கடி எதிர்க்கொண்டுள்ளது.

சாரதிகள் மற்றும் நடத்துநர்களின் நிதி மோசடியால் இலங்கை போக்குவரத்து சபை நாளாந்தம் ஒரு கோடி ரூபா நட்டத்தை எதிர்க்கொண்டுள்ளது. இதுவும் ஒருவகையான அரச நிதி மோசடியே இந்த முறைகேடு தொடர்பில் பொலிஸ்மா அதிபரிடம் முறைப்பாடளித்துள்ளேன். இந்த நிதி மோசடி குறித்து ஆராய 12 நடமாடும் சுற்றிவளைப்பு சேவைகளை செயற்படுத்துமாறு போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்கியுள்ளேன். அரசபஸ்களில்பயணிக்கும் போது பொது பயணிகள் நிச்சயம் பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்ள வேண்டும். போக்குவரத்து சபைக்குள் இடம்பெறும் நிதி மோசடியை தடுக்காவிட்டால் இலங்கை போக்குவரத்து சபையை பாதுகாக்க முடியாது. - என்றார். (05)

# அடிமை வாழ்வு வேண்டாம் விடிவை பெற்று தாருங்கள்!



மலையக அரசியல்வாதிகளுக்கு குருநாகல் - பத்தலகொட மக்கள் கோரிக்கை கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

இன்றும் நாங்கள் லயன் குடியிருப்புகளில் அடிமைகளாகவே வாழ்ந்து வருகின்றோம் எனவும், இந்த அவல நிலை தங்களின் பிள்ளைகளின் எதிர்கால வாழ்க்கையைப் பாதிக்கும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்துடன் எங்களின் வாழ்க்கை கனவாக மட்டுமே உள்ள நிலையில், விடிவை பெற்றுத் தருமாறும் குறித்த கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

பத்தலகொட மக்களின் உருக்கமான கடிதம் இணைக்கப்பட்டுள்ளது.(05)

# வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளில் சீனாவின் அங்கீகாரத்துக்கு காத்திருக்கிறது இலங்கை

இலங்கையின் வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளில் ஏனைய கடன் வழங்குநர்களுடனான பொறிமுறை ஒன்றின் கீழ் பொது இணக்கப்பாட்டுக்கு வருவதில் சீனா இன்னும் இறுதி தீர்மானத்தை அறிவிக்கவில்லை. இதனால் சர்வதேச நாணய நிதியத்துடனான அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன.

சீனா, இலங்கையின் முன்னணி கடன் வழங்குநராக உள்ளது. சுமார் 7.4 பில்லியன் அமெரிக்க டொலர் களை சீனாவுக்கு இலங்கை செலுத்த வேண்டும். இவ்வாறானதொரு நிலையில் இலங்கையின் சர்வதேச கடன்மறுசீரமைப்பு நடவடிக்கைளை வெற்றிகரமாக முன்னெடுக்கும் வகையில் ஏனைய பிரதான கடன் வழங்குநர்களாக இந்தியா, ஜப்பான் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் ஒன்றிணைந்து செயற்படுகின்றது. ஆனால் இந்த கூட்டணியில் இணைவதில் சீனா மறுத்து வருகின்றது.

அதே போன்று பாரிஸ் கிழப் ஊடான நடவடிக்கைகளில் வெறும் கண்காணிப்பாளராகவே சீனா உள்ளது. பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஆகியோரின் அண்மைய சீன விஜயத்தின் போது இலங்கை தரப்பினரால் கடன் மறுசீரமைப்புக்கு ஒத்துழைக்குமாறு கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. இலங்கையின் பொருளாதார முன்னேற்ற செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக சீனா தெரிவித்துள்ள போதிலும் கடன் மறுசீரமைப்புகள் குறித்து பேசாது, கடன் முகாமைத்துவம் என்ற அடிப்படையில் கலந்துரையாடல்களைமுன்னெடுக்கின்றது.

இந்நிலையில் சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் குழுவொன்று எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 14 மற்றும் 27ஆம் திகதிகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். இந்தக் குழுவின் விஜயத்துடன் இடம்பெறவுள்ள முதலாவது மதிப்பாய்வு கூட்டத்தின் போது ஜூன் மாதம் இறுதி வரையிலான விரிவாக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தின் செயல்திறன் தொடர்பாகப் பரிசீலிக்கப்படும்.

அதனைத் தொடர்ந்து அந்தக் குழுவாலும், சர்வதேசநாணயநிதியத்தின் நிர்வாக சபையாலும் அங்கீகரிக்கப்பட்டால் சுமார் 350 மில்லியன் டொலர் நிதி இலங்கைக்குக் கிடைக்கும். சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாக சபை கடந்த மார்ச் மாதம் 48 மாத விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் 2.9 பில்லியன் டொலரை இலங்கைக்கு வழங்க அங்கீகாரமளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மாணவர்களின் தற்கொலைகள் மீது சமூகத்தின் கவனம் தேவை

அண்மைக் காலங்களாக பல்கலைக்கழக மாணவர்கள் தற்கொலை செய்துகொள்ளும் செய்திகள் அதிகமாக வருகின்றன. அதிலும் வடபகுதியைச் சேர்ந்த தமிழ் மாணவர்கள், குறிப்பாகத் தெற்கில் கல்வி பயிலக்கூடிய வடக்கு மாணவர்கள் தற்கொலை செய்துகொள்ளும் போக்கு அதிகரித்திருப்பதாகத் தோன்றுகின்றது. இந்தச் சமூகச் சிக்கல் மீது சமூகத்தின் போதிய அக்கறை செலுத்தப்படுகின்றதா என்கிற கேள்வி எழுகின்றது.

சில நாள்களுக்கு முன்னர் கிளிநொச்சியைச் சேர்ந்த மொறட்டுவ பல்கலைக்கழக பொறியியல் பீட மாணவன் ஒருவர் தூக்கில் தொங்கித் தற்கொலை செய்துகொண்டுள்ளார். ஆசிரியர்களான பெற்றோர் வீட்டில் இல்லாத சமயம் அவர் தற்கொலை செய்துகொண்டுள்ளார் என்று பொலிஸார் விசாரணைகளை முடித்துள்ளனர். அவர் தற்கொலை செய்துகொண்டதற்கான காரணம் குறித்து எந்த விவரங்களும் வெளிவரவில்லை.

கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சையில் கணிதப்பிரிவில்கிளிநொச்சிமாவட்டத்திலேயேமுதல் இடத்தைப் பிடித்த ஒரு சிறந்த மாணவனின் உயிர் இப்படி அநியாயமாகப் பிரிந்திருக்கின்றது. இதற்கு முன்பும் தெற்குப் பல்கலைக்கழகங்களில் கல்வி பயின்ற கணிதப் பிரிவு மாணவர்கள் தற்கொலை செய்துகொண்டார்கள்என்றுசெய்திகள்வந்துள்ளன.

தற்கொலைகள் தெற்கில் மட்டும்தான் நடக்கின்றன என்று இல்லை. அண்மையில் யாழ். பல்கலைக்கழகத்தில்கல்விபயின்றமாணவர்களும் தற்கொலை செய்துகொண்டார்கள் என்கிற செய்திகள் வெளியாகி இருக்கின்றன.

பாடசாலைக் காலங்களில் நன்றாகக் கற்று மிகச் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுப் பல்கலைக் கழகத்திற்குள் பல ஆசைகள், கனவுகளுடன் நுழையும் கெட்டிக்கார மாணவர்கள் வாழ்க்கையில் எங்கே தோற்றுதற்கொலைமுடிவுக்குப்போகிறார்கள்என்பதை ஆராய்ந்து தீர்வு காணவேண்டிய தேவையைச் சரிவரப் புரிந்துகொள்ளவேண்டியிருக்கிறது.

சாதாரணமாகவே தற்கொலை செய்து கொள்வோரின்எண்ணிக்கைஇலங்கையில்அதிகம். தெற்காசியாவிலேயே அதிகளவில் தற்கொலை செய்துகொள்வோரின்எண்ணிக்கையைக்கொண்ட நாடு இலங்கை. நீண்ட காலமாகவே இந்த நிலை தொடர்ந்தாலும் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அதிகளவில் முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரியவில்லை. தற்போது அது மாணவர்கள் மத்தியிலும் தீவரமாகப் பரவி எதிர்காலத்தை அழிக்கும் நிலைக்கு எடுத்துச் செல்வதன் மீது அக்கறை செலுத்தப்படவேண்டியது அவசியம்.

திறமையான மாணவர்கள் தற்கொலை செய்து கொள்வதற்கான காரணம் என்ன என்பதை ஆய்வுக்குட்படுத்தி தீர்வைக் காண்பதற்கான வழி வகைகளைச் சுகாதாரப் பிரிவினர், குறிப்பாக வடக்கு சுகாதாரப் பிரிவினர் மேற்கொள்ளவேண்டும். காவல்துறையினர் இந்த இறப்புக்களை வெறும் தற்கொலைகளாக கடந்து செல்வதைத் தவிர்த்து அதற்கான காரணத்தைத் தீர விசாரித்தறிவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அவற்றுக் ஏற்ப குடும்ப மற்றும் சமூகச் சூழல், தேவைப்பட்டால் கல்விச் சூழலிலும் மாற்றங்களை ஏற்படுத்துவது குறித்து அக்கறை செலுத்தப்படுதலும் அதற்கான திட்டங்களைச் செயற்படுத்தலும் அவசியமானவை. அரசியல் கட்சிகளும் இது விடயத்தில் அக்கறை எடுத்து எதிர்காலச் சந்ததியை காப்பதற்கு வழிவகை செய்யவேண்டும்.

# இலக்கியத்தில் இணைந்த பனை

அங்கம் - 10



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா.



கற்பகதருவாம் பனையின் ஓலைகள் எப்படி எழுத்துக்களைச் சுமந்து பயனளித்து வந்தது என்னும் வரலாற்றைப் பார்த்தோம். ஏட்டுச் சுவடிகளாய் மாறி எல்லோர் மனத்திலும் அமர்ந்துவிட்ட பனைஓலையின் பல பரிமாணங்களையும் பார்ப்பதும் அவசியம் அல்லவா! பனை ஓலை என்றவுடன் அதனைச் சாதாரணமாக எடுத்து விடவே கூடாது. அதன் பயன்பாடு என்பது பல நிலைகளில் பரந்து விரிந்து காணப்படுகிறது. இதழ், கூந்தல், மடல், மாழை, என்னும் பெயர்களையும் பனை ஓலை தாங்கி நிற்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

பனையின் ஓலைகளை குருத்தோலை என்கிறோம். காவோலை என்கிறோம். வற்றோலை என்கிறோம். முந்தல் ஓலை என்கிறோம். இளம் பனையினை வடலி என்கிறோம். இதன் ஓலைகளை வடலி ஓலைகள் என்றே அழைக்கிறோம்.. இவை ஒவ்வொன்றுமே பயனை நல்கிடும் வகையில்த்தான் அமைந்திருக்கின்றன என்பதையும் கருத்திருத்தல் நலமேயாகும். பனை ஓலைக்கு தாளீ பலாசம் என்றும் பெயர் இருக்கிறது. பனை ஓலையினை மடித்துக் காதிலும் அணிந்திருக்கிறார்கள். காதோலை என்னும் பெயர் இன்றும் பயன்பாட்டில் இருக்கிறது. ஆனால்



ஓலையாக அல்லாமல் தங்கமாயும், பொன்னாகியும் ஆபரணங்களாய் மாறிய நிலையினையே இன்று காண்கின்றோம் எது எப்படி மாறினாலும் காதோலை என்னும் சொல்லில் மட்டும் மாற்றம் வரவில்லை என்பதுதான் முக்கியமாகும். பனை ஓலை காதில் அணியும் நிலையில் இருந்திருக்கிறது. அதே ஓலை தான் பிற்காலத்தில் நாம் முக்கியமாகப் பயன்படுத்தும் மாங்கல்யம் என்னும் தாலிக்கும் வித்தாகும் என்பதையும் கருத்திருத்தல் அவசியமேயாகும்.

பனையில் ஓலைகள் எப்படி வளருகின்றன தெரியுமா ? ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு ஓலை என்ற படி முறையில்த்தான் பனையில் ஓலைகள் வந்து சேருகின்றன. வளரும் நிலையில் இருக்கின்ற இளம்பனைக்கு வடலி என்று சிறப்புப் பெயரிட்டுத்தான் அழைத்து வருகிறோம். குருத்தோலையாக வருகின்ற நிலையில் அதன் நிறம் இளம் மஞ்சளாகவே இருக்கும். வளர்ந்த குருத்தோலை விரிந்து அகலமாக காட்சி தரும் பொழுது அதனை சாரோலை என்னும் பெயர் கொண்டு அழைக்கிறோம். குருத்தோலையும். சாரோலையும், மென்மையான தாகவும், இளம் மஞ்சளாகவும் காட்சிதரும். முற்றிய ஓலைகள் நல்ல கரும் பச் சையாகவும் , அதன் மட்டைகள் இளம் பச்சை நிறத்திலும் அமைந்து காணப்படும். முற்றிய ஓலைகளின் மட்டைகளின் ஓரங்களில் கறுத்த நிறத்திலான வாள்போன்ற கருக்குகள் அமைந்திருக்கும். முற்றிய ஓலைகளை வெட்டும் பொழுது - குருத்தோலைகளையும் வெட்டுவார்கள். முற்றிய ஓலைகளை ஒரு பக்க மாயும், குருத்தோலைகளை ஒரு பக்கமாகவும் எடுத்து வைப்பது வழக்கமாய் இன்னும் இருந்து கொண்டே வருகிறது. குருத்தோலைகள் மிகவும் கவனமாய் பார்க்கப்படுகின்றன. முற்றிய ஓலைகளுக்கு - குருத்தோலைகளுக்குக் காட்டும் கரிசனை அவ் வளவு காட்டப்படுவதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. குருத் தோலைதான் கைத் தொழிலுக்கு பல வகைகளில் கைகொடுக்கும் வகையில் முன்னிற்கிறது என்பது குறிப்பிடத்தக்கது எனலாம்.

பனை ஓலை குடியிருக்கும் வீட்டின் கூரையாய் அமைந்து - குளிரிலும், வெப்பத்திலும், மழையிலும் இருந்து காத்து வந்திருக்கிறது. பனை ஓலை களைக் கொண்டே வீட்டின் அனைத்துப் பகுதிகளையும் சுவராக்கியும் மக்கள் வாழ்ந்து வந்தார்கள். மாடி வீடுகளும் , ஆடம்பர வீடுகளும் இப்போது எங்கும் பல்கிப் பெருகி இரு க்கும் வேளை - பனையின் ஓலைகளால் ஆன வீடுகளைக் காண்பதும் பெரும் அதிசயமாகவே தென்படும். நவீனம் புகுந்து விடாத ஒதுக்குப் புறமான கிராமங்களில் பனை ஓலை என்பது வீட்டின் கூரையாய் இருப்பதை இன்றும் காணக்கூடியதாக இருக்கிறது. நவீன தற்காலத்து வீடுகளைச் சுற்றி பலவிதத்தில் மதிற் சுவர்கள் கட்டப்படுகின்றன. பழைய ஓலைக்குடிசை வீடுகளின் காவல் அரணாக அமைந்த வேலிகள் பனையின் ஓலை கொண்டுதான் அமைந்திருந்தன. அதுமட்டுமல்ல சில கல் வீடுகளின் பாதுகாவலனாக பனை ஓலை வேலிகளே இருந்தன என் பதும் நோக்கத்தக்கதாகும். பனை ஓலைக் கூரைதாங்கிய குடிசை வீடு களில் இருக்கின்ற மக்களிடம் காணப்படுகின்ற நல்ல உணர்வுகளை - நவீன மாடி வீடுகளில் வாழுகி ன்றவர்கள் மத்தியில் தேடித்தான் பிடிக்க வேண்டிய நிலையே இன்று காணப்படுகிறது எனலாம்.

பனை ஓலை வாழ்க்கையோடு பல விதங்களில் பிணைந்தே இருக்கிறது என்பதுதான் உண்மை. இருக்கும் வீட்டின் கூரையாய் அமைந்ததோடு - வீட்டுக்குரிய பாவனைப் பொருட்களாயும், விவசாயத்துக்குரிய பயனான பொருட்களாயும் ஆகி இருக்கிறது என்பதும் கருத்திருத்த வேண்டியதே எனலாம். ஓலைப் பெட்டிகள் என்னும் நிலையில் பலவகை வடிவங்கள். அந்த வடிவங்களுக்கென்றே பல அழகான பெயர்கள். கண்ணக் கவரும் விதத்தில் பல வண்ணங்களில் விதம்விதமான பொருட்கள். அன்றாடம் சமையல் பகுதியில் பயன்படுத்துவதற்கு என்று விசேட பொருட்கள். அலங்காரம் செய்வதற்கான அழகொளிரும் பல பொருட்கள், என்று பனை ஓலை பல பரிணாமங்களை எடுத்திருக்கிறது என்பதையும் கருத்திருத்தல் அவசியமாகும்.

இடியப்பத் தட்டு, நீத்துப்பெட்டி, சுளகு, கடகம், அடுக்குப் பெட்டி , மூடற் பெட்டி, சரக்குப்பெட்டி, சுத்துப் பெட்டி, தட்டுப்பெட்டி, சாமத்தியப்பெட்டி, கொட்டைப் பெட்டி, கட்டுப்பெட்டி, அர்ச்சனைப் பெட்டி, பாய், தடு க்கு, களப்பாய், வட்டச்சுளகு, பூக்கூடை, தையல்பெட்டி, கைப்பை, பனை ஓலை சுவர் மாட்டி, விசிறி, விளையாட்டுப் பொருட்கள், என்று பனை ஓலை பல நிலைகளில் பயனாகி நிற்கிறது என்பதை மறுத்துவிட முடியுமா நினைத்துப் பாருங்கள் !

பனை ஓலையினை மூலப் பொருளாகக் கொண்டு கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இதன் பயனாக பலரும் பயன் பெற்றும் வருகிறார்கள். கைத்தொழிலுக்குப் பனையின் ஓலைகள் கைகொடுத்து உதவுங் காரணத்தால் கற்பகதருவாம் பனைபற்றிய கரிசனை யாவரிடமும் ஏற்பட்டிருக்கிறது என்பதும் கருத்திருத்த வேண்டியதேயாகும்.

பனை ஓலையினைக் கொண்டு பலவிதபொருட்கள்செய்யும்தொழிலானது இலங்கையில் வடக்கிலும் கிழக்கிலும் நடைபெற்று வருகிறது. நிறுவன ரீதியாகாவும், குடும்பமாகவும், பனை ஓலை தொடர்பான தொழி லும் அது சார்ந்த உற்பத்திகளும் இடம்பெற்று வருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. குடும்பமாகச் செய்யும் நிலையானது அவர்களுக்கான வாழ்வாதாரத்தை வளம்படுத்த பெரிதும் பலனை நல்காவிட்டாலும் அவர்கள் கிடைக்கும் வருமானத்துக்காக பனை ஓலை சார்ந்த தொழிலினைச் செய்து கொண்டு இருக்கிறார்கள் என்றுதான் எண்ண முடிகிறது. போதிய சந்தை வாய்ப்புகள் அவர்களுக்கு வாய்க்குமானால் அவர்களின் வாழ்வும் வசந்தமாகும்.

பனை ஓலையினை எடுத்த எடுப்பில் தொழிலுக்குப் பயன்படுத்தி விட முடியாது. குருத்தோலைகளைக் கவ னமாக எடுத்து அவற்றைக் காய வைத்தல் வேண்டும். வெய்யிலில் காய வைக்கும் பொழுதும் அதனை பதமாக வரும் நிலையில் காயவிடுதல் முக்கியமாகும். மிகக் காய்ந்து விடின் கைவேலையின் போது ஓலை கள் முறியவும் உடையவுமான நிலை வந்துவிடும். ஆகையால் ஓலையின் பதப்படுத்தலில் கவனம் மிகவும் தேவையான ஒன்றாகவே இருக்கிறது.

ஓலைகளைப் பதமாக எடுத்தபின் அவற்றுக்குச் சாயம் இடும் ஒரு நிலையும் இருக்கிறது. கோழிச்சாயம் என்பதை

(6ஆம் பக்கம் பார்க்க..)


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Roty With Vegitable
in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swebpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# இழுபறி நிலை இனங்களுக்கிடையில் முரண்பாடுகளைத் தோற்றுவிக்குமாம்

## திஸ்ஸ அத்தநாயக்க கருத்து

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டம், அதிகார பகிர்வு உள்ளிட்ட பிரச்சினைகளுக்குதீர்வுகாண்பதாகக் கூறி முன்னெடுக்கப்படும் விடயங்கள் இனங்களுக்கிடையில்முரண்பாட்டை தோற்றுவித்து விடும்.

எனவே ஜனாதிபதி இவ்வாறான வீணான குழப்பங்களை ஏற்படுத்தி காலத்தை இழுத்தடிப்பு செய்யாமல் உடனடியாக தீர்மானமொன்றுக்கு வரவேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸஅத்தநாயக்கதெரிவித்துள்ளார்.

கொழும்பு பொரளை பகுதியில் இடம்பெற்ற மத நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துதெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

நாட்டு மக்கள் 13 ஆவது திருத்தச்சட்டம் பற்றி கதைக்கிறார்களா? இல்லை. பொருளாதாரப் பிரச்சினைகள், அதிகரிக்கப்பட்ட நீர் கட்டணம், செலுத்த முடியாமல் உள்ள மின் கட்டணம், சிறுவர்களுக்கு ஏற்பட்டுள்ள மந்தபோசணை, கடைக்குச்சென்றுபொருள்களைஅதிக விலைக்கு கொடுத்து கொள்வனவு செய்ய முடியாமை உள்ளிட்ட பிரச்சினைகள் தொடர்பிலேயே அதிகம் கதைக்கிறார்கள். மக்களுக்கு வருமானம் பெற்றுக் கொள்ளும் வழிகள் கிடையா. தமக்கு நிம்மதியாக வாழ்வதற்கான சூழல் ஒன்றை உருவாக்கி நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புங்கள் என்றே கோரிக்கை விடுக்கின்றனர். இவ்வாறு பல பிரச்சினைகள் காணப்படும் போது ஜனாதிபதி 13 ஆவது திருத்தம் தொடர்பில்ஏன்அடிக்கடிகதைக்கிறார்?. இந்த சந்தர்ப்பத்தில் 13 தொடர்பில் ஏன் கதைக்க வேண்டும். இவற்றை பார்க்கும்போது இரண்டு விடயங்கள் தெரிகிறது. ஒன்று 13 அமுல்படுத்தப் போவதாக கூறி நாட்டில் நிலவும் உண்மையான பிரச்சினைகளை மறைப்பது. இரண்டாவது அடுத்த வருடம்இடம்பெறவிருக்கும்ஜனாதிபதி தேர்தலில் வடக்கு, கிழக்கு மக்களின் வாக்குகளை பெற்றுக் கொள்வது என்பனவாகும்.

எவ்வாறாயினும் ஜனாதிபதி 13 ஐ நடைமுறைப்படுத்த போவதுமில்லை. நான் அதனை செய்வேன் என இந்தியாவையும், தமிழ் அரசியல்வாதிகளையும்,வடக்குகிழக்குமக்களையும் ஏமாற்றிக்கொண்டிருக்கிறார். 13என்பது அரசமைப்பின் ஒரு பகுதியாகும்.

முதலில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துங்கள். தேர்தலை நடத்தினால் 13 ஆவது திருத்தத்தில் உள்ள 98 வீதமான விடயங்களை பூர்த்தி செய்ததை போன்றதாகும்.

மிகுதி பொலிஸ் அதிகாரங்கள் மற்றும் இடம் என்பன தொடர்பில் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படும் உள்ளூராட்சி மன்றங்களுடன் கலந்துரையாடி தீர்மானங்களை எடுக்க முடியுமல்லவா. - என்றார்.(05)

# எதிர்க்கட்சிகளை ஒன்றிணைத்து அரசியல் கூட்டணி விரைவில்

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல எதிர்க்கட்சிகளை ஒன்றிணைத்து பரந்துபட்ட அரசியல் கூட்டணியை வெகுவிரைவில் ஸ்தாபிப்போம். எதிர்க்கட்சிகளை பலவீனப்படுத்த ஜனாதிபதி மேற்கொண்டுள்ள முயற்சிகளை தோற்கடிப்பது அத்தியாவசியமானது என சுதந்திர மக்கள் சபையின் பிரதிநிதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான டிலான் பெரேரா தெரிவித்தார்.

மாத்தறை, கம்புறுபிட்டி பகுதியில் இடம்பெற்ற சுதந்திர மக்கள் சபையின் தொகுதி அமைப்பாளர் கூட்டத்தில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

ராஜபக்ஷர்களின் பாதுகாவலனாகவே ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். நெருக்கடியான சூழலில் எவரும் அரசாங்கத்தைப் பொறுப்பேற்கவில்லை என்று குறிப்பிடுகின்றமை தவறு. அரசாங்கத்தைப் பொறுப்பேற்கத் தயார் என சுதந்திர மக்கள் சபையின் தலைவர் டலஸ் அழகபெரும அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் குறிப்பிட்டார். டலஸ் அழகபெருமவை பிரதமராக்க வேண்டாம் என பஸில் ராஜபக்ஷ குறிப்பிட்டார். ராஜபக்ஷர்களுக்கு எதிரானவர்களைப் பிரதமராக்கினால் ராஜபக்ஷர்களின் எதிர்கால அரசியல் பாதிக்கப்படும் என்பதை நன்கறிந்து 134 உறுப்பினர்கள் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாகத் தெரிவுசெய்தார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றதன் பின்னர் எதிர்க்கட்சிகளை பிளவுபடுத்தும்செயற்பாட்டை சிறந்த முறையில் மேற்கொண்டுவெற்றிகொண்டுள்ளார். தற்போதையநிலையில் பலமான எதிர்க்கட்சி ஒன்று இல்லாத காரணத்தால் அரசாங்கம்தன்விருப்பத்துக்கு அமைய செயற்படுகிறது.

தேர்தல் ஒன்று இடம் பெறும் வரை சகல எதிர்க்கட்சிகளும் நாட்டுக்காக ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளோம். நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல எதிர்க்கட்சிகளையும் ஒன்றிணைத்துபரந்துபட்டஅரசியல் கூட்டணியை வெகுவிரைவில் ஸ்தாபிப்போம். - என்றார். (05)

# தியாவின் நூல் நேற்று வெளியீடு






தமிழ்தேசிய இலக்கியப் பேரவை ஏற்பாட்டில் கவிஞர் தியாவின் நீ கொன்ற எதிரி நான் தான் தோழா கவிதை நூல் வெளியீட்டு விழா இன்று பிற்பகல் 3.30 மணியளவில் கரைச்சி பிரதேச சபை மண்டபத்தில் தீபச்செல்வன் தலைமையில் இடம்பெற்றுள்ளது

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரன் வடமகாண முன்னாள் சபை உறுப்பினர் குருகுலராஜா முன்னாள் பிரதேச சபை தவிசளர் ஆ. வேழமாலி கிதான் என பலரும் கலந்துகொண்டனர்

# ராஜபக்ஷக்களே நாட்டை அழிவுப் பாதைக்கு நகர்த்தினர் என்பதை மக்கள் மறக்கவில்லை

## அஜித் மன்னம்பெரும சுட்டிக்காட்டு



நாட்டை வங்குரோத்தடையச் செய்த ராஜபக்ஷர்கள் இன்று கிராமம் சென்று அரசியல் கூட்டங்களை நடத்திக் கொண்டிருக்கின்றனர். ஆனால் அவர்கள் தான் நாட்டைஅழிவுப்பாதைக்கு இட்டுச்சென்றனர்என்பதை மக்கள் இன்னும் மறக்கவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் மன்னம்பெருமதெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் -

நாட்டை அழிவுப் பாதைக்குகொண்டுசென்றது யார் என்பதை மக்கள் இன்னும் மறக்கவில்லை. ஆனால் ராஜபக்ஷர்கள் இதனைமறந்துசெயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

ஒவ்வொரு அமைச்சர்களும் தாம் செய்த மோசடிகளிலிருந்து தப்பித்து வெளிவருவதற்கு முன்னுரிமையளிக்கின்றார்களே தவிர, மக்களைப் பற்றி எவரும் சிந்திக்கவில்லை.

காணி தொடர்பில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பிரச்சினைகள் காணப்படுகின்றன. மகாவலிகாணியைவிடுவிக்க வேண்டாம்என்றுதொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது.

மறுபுறம் வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கின்றனர். அதனைத்தடுப்பதற்கு எந்தவொரு வேலைத்திட்டமும் முன்னெடுக்கப்படவில்லை.

பன்மடங்கு அதிகரித்துள்ள மின் கட்டணத்துக்கு தீர்வு இல்லை. தேசிய மின் கட்டமைப்பிலிருந்து தெற்கிற்கு மின்சாரத்தை வழங்க முடியாத நிலைமை காணப்படுகிறது.

பேராசிரியர்களும் ஆசிரியர்களும் நாட்டை விட்டு வெளியேறிக் கொண்டிருப்பதை தடுக்க முடியாத கல்வி அமைச்சர், கல்வி முறைமையை மறுசீரமைக்கவுள்ள தாகத் தெரிவித்துக் கொண்டிருக்கின்றார். - என்றார். (05)

# கிளிநொச்சி விபத்தில் காயமடைந்தவர் சாவு




கிளிநொச்சியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை வீதி விபத்தில் சிக்கிய ஆசிரியை சிகிச்சை பயனின்றி நேற்று யாழ் போதனா வைத்தியசாலையில் உயிரிழந்தார்.

கிளிநொச்சி இராமநாதபுரம்மகாவித்தியாலயத்தின் உப அதிபரும், பிரபல தமிழ் ஆசிரியருமான ஜீவரஞ்சினி (ஜீவா ரீச்சர் வயது -53) விபத்தில் படுகாயமடைந்த பின்னர் உயிரிழந்துள்ளார்.

ஞாயிறு இரவு கிளிநொச்சியிலிருந்து கணவருடன்உந்துருளியில் வட்டக்கச்சி நோக்கிச் சென்று கொண்டிருந்தவர் கிளிநொச்சி நகரினுள் ஏ9 வீதியில் காக்கா கடைச் சந்தியில்வட்டக்கச்சிக்கு திரும்பும் போது எதிர்பக்கம் வந்த காருடன் மோதி விபத்துக்குள்ளானார்.

படுகாயமடைந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவர்,மேலதிகசிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

நேற்று அவர் அங்கு உயிரிழந்தார். இச்சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரனைகளை மேற்கொண்டுவருகின்றனர்(113)

# நல்லூர், முத்திரைச் சந்தியில் உள்ளூர் உற்பத்திச் சந்தை

## ஓகஸ்ட் 29, 30 இரு நாள்களும்

யாழ். மாவட்ட சிறுதொழில்முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருள் சந்தை ஓகஸ்ட் 29, 30 இருநாள்களும் நல்லூர், முத்திரைச் சந்தியில் அமைந்துள்ள கிட்டுப் பூங்காவில் (சங்கிலியன் பூங்கா) இடம்பெறவுள்ளது.

யாழ். மாவட்டச்செயலக சிறுதொழில்முயற்சி அபிவிருத்திப் பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தச் சந்தை தரமான உள்ளூர் உற்பத்திப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அத்தோடு உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதும் இதன் நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வைத்தியர்கள் பிரச்சினைக்குத் தீர்வின்றேல் வேறு வகையான தொழிற்சங்க நடவடிக்கை

## ஹரித அலுத்கே எச்சரிக்கை



வைத்தியர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்குப்பதிலாகவைத்தியர்களை அச்சுறுத்தவே சுகாதாரஅமைச்சுமுயற்சித்து வருவதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

எனவே, இந்தப் பிரச்சினைகளுக்கு சுகாதார அமைச்சு உடனடி தீர்வை வழங்காவிடின்எதிர்காலத்தில் கடுமையானநடவடிக்கைகள் எடுக்கப்படும் என சங்கத்தின்செயலாளர்டாக்டர்ஹரித அலுத்கே கூறியுள்ளார்.

எதிர்வரும் வாரத்தில் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படாவிட்டால், வேறு வகையான தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு வைத்தியர்கள் தீர்மானித்துள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (05)

# இலக்கியத்தில் இணைந்த பனை

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

பலரும் பயன்படுத்தி வந்தே இருந்திருக்கிறார்கள். ஓலைகளுக்கான சாயங்கள் - பச்சை, செம் மஞ்சள், மஞ்சள், சிவப்பு என்னும் வகையிலேயே அதிகம் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. எந்த எந்த நிறம் தேவையோ அந்த அந்த நிறத்தை தேர்ந்தெடுத்து பயன்படுத்துவார்கள். ஓலையில் சாயம் இடுவதை மிகவும் கவனமாகச் செய்தல் வேண்டும்.அதற்கு நல்லஅனுபவமும்தேவைப்படுகிறது. பாயிழைக்கும் வேளை அதற் குப் பொருத்தமான நிறத்தைப் பயன் படுத்துவார்கள். பெட்டிகள் இழைக்கும் வேளை அதற்கு இயைபான வர்ணங்களையும் பயன்படுத்துவார்கள். பல வித வடிவங்களில் அலங்காரப் பூக்களையும் பூங்கொத்துக்களையும் பனை ஓலையினால் இப்போது செய்கிறார்கள். அவ்வாறு செய்யப்படுகின்ற பல வர்ணங்களில் அமைந்த பூக்கள் எல்லாம் பார்ப்பவரைக் கவர்ந்திழுக்கும் கலை நயத்துடன் அமைந்தே காணப்படுகின் றன. பல வண்ணங்களில் செய்யப்படுகின்ற பனை ஓலையினாலாகிய பூக்களும், பூக்கொத்துக்களும் என்றுமே வாடாத பூக்களாய் அழகுடன் காட்சி அளித்துக்கொண்டே இருக்கும் என்பதைக் கருத்திருத்தல் வேண்டும்.

பனை ஓலையினைக் கொண்டு குழந்தைகளுக்கான விளையாட்டுப் பொருட்களும் தயாரிக்கப்படுகி ன்றன. தொப்பிகள் செய்யப்படுகின்றன. பூந்தொட்டிகளாகவும் பயன்படும் வகையிலும் பனை ஓலை கொண்டு பல வடிவங்களில் பல பொருட்கள் பழக்கத்துக்கும் வந்திருக்கின்றன. பூச்சாடிகள், பெரிய கூடைகள், என்றும் தற்போது பயன்பாட்டுக்கு வந்திரு ப்பதும் நோக்கத்தக்கது. பின்னல் வகையிலும் பொருட்கள் பல செய்து பயன்பாட்டுக்கு வந்திருக்கின்றன. பல வர்ணங்களை சேர்த்து சாதாரண பின்னல்களில் அலங்காரப் பொருட்கள் வந்திருக்கின்றன. அதேவேளை விசேட முறையில் - வாழை முடிச்சுப்பின்னல், கன்னி முடிச்சுப்பின்னல் என்னும் பின்னல் முறையிலும் வர்ணங்கள் பல இணைய பனை ஓலை அலங்காரப் பொருட்கள் சந்தைக்கு வந்திருப்பதும் கருத்திருத்த வேண்டியதே.







பனையில் ஓலையை வெட்டுவதற்கும் கால அளவும் மாதமும் இருக்கிறது. பனையின் ஓலைகள் மாதத்துக்கு ஒன்றாகவே வளருகின்றன என்பதைப் பார்த்தோம் எந்த நாளும் பனையில் ஓலைகளை வெட் டிவிடல் என்பது பொருந்தி வரமாட்டாது. பங்குனி தொடங்கி ஐப்பசி மாதம்தான் பனையில் ஓலைகளை வெட்டுவதற்கு உகந்த மாதங்களாக இருக்கின்றன. ஒவ்வொரு வருடமும் ஓலை களை வெட்டுவது என்பதும் கஷ்டமாகும். இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை என்பதே பொருத்தமாய் அமைகிறது என்பதும் கவனத்தக்குரியதாகும்.

முற்றிய பனைக்கும் முற்றாத பனைக்கும் ஓலை வெட்டுவதிலும் விதி முறைகள் இருக்கின்றன. இளம் பனைகளில் குறைந்த ஓலை களை - அதாவது பத்து அல்லது பனிரெண்டு ஓலைகளைத்தான் வெட்டு வார்கள். முற்றிய பனையில் வெட்டும் போதும் பனையினை முற்று முழுதாக மொட்டை அடித்து விட மாட்டார்கள்.

முற்றிய பனைகளில் ஓலைகளை வெட்டும் பொழுது பத்து ஓலைகளையாவது பனையில் விட்டே வெட்டுவதுதான் வழக்கமாகும். பதநீர் என்பதும் பனையின் கொடையாகும். பதநீருக்குஎன்று விடப்படும் பனைகளில் ஓலைகளை வெட்டும் போது அவதானமாகவே வெட்டுவார்கள். ஓலை என்பது பனையின் மிகவும் முக்கிய பாகமாகும். வெட்டினால் வளருந்தானே என்று எண்ணி ஓலைகள் முழுவதையும் ஒரேயடியாக வெட்டி விடுவோமேயானால் பனையினின்றும் எந்தப்பலனையும் பெற்றுவிட முடியாதவர்கள் ஆகியே விடுவோம். பனையானது தனது உணவினைத் தயாரிக்க ஓலை களைத்தான் நம்பி இருக்கிறது. பனையினை மொட்டை அடித்தால் பனையின்உணவுத்தயாரிப்புநின்றுவிடும். நின்று விட்டால் பனையின் கதி அதோ கதிதான்! ஆன படியால்த்தான் ஓலை வெட்டு வதிலும் சிறந்த கவனம் செலுத்தப்படுகிறது என்பதை கருத்திருத்தல் அவசியமாகும். பனையின் பச்சை ஓலைகளை வெட்டும் பொழுது காய்ந்த ஓலைகளும், பழுத்த ஓலைகளும் கூடவே பனையில் இருக்கும். அவற்றைக் கட்டாயம் வெட்டி விடவே வேண்டும். அப்படி வெட்டி விடும் பொழுது அது பனையின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியாய் இருக்கிறது என்பதும் கவனத்துக்குரியதேயாகும்.

வன்னக் குருத்தில் வடிவாகச் செய்கின்ற
பன்னவகை இன்னவெனப் பன்னரிதால் – அன்னவை
புத்தகப் பெட்டி புகல்கட்டுப் பெட்டி பல
வித்தகப் பெட்டி மிகு குட்டான் – வைத்த
கடகம் பத்தாயம் கதிர்ப்பாய் கிடையாய்
திடமாம் உமலளவு சேர்கள் – கடவுட்டிரு
நீறிடுங் குட்டான்கள் நீரிறைக்கும் பட்டைவகை
பிள்ளைவிளை யாடுபொருட் பேதமாங் –
சுரையுண் பிழாவுமாஞ் சோறுண் கலமாம்
நிரையூணு மாகவே நேர்வ – ருரையோலை
ஈர்க்கினுறி யீர்வாணி யேற்றசட்டி பானைகளைச்
சேர்குமனை தட்டு முறஞ் செய்யலாம்
ஓவிய மோடுயர் காவிய மானவை
யாவையு மெழுதி வைக்கலாம் – வீடு
வேயலாம் வேலியடைக்கலாம் வரும்
வியர்வை யகற்றி விசிறியதைப் பல
விநோதம தாயே படைக்கலாம்

OKAYA
ELECTRIC VEHICLES

dsl
We lead the way...!

# பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை விட 77% இலாபமான பாவனைக்கு

# The inEVitable

## Future of Smart Mobility

FAAST-F4
140-160 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்

FAAST-F2T
80-85 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்

FREEDOM
70-75 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்



**Rs.550,000/- இருந்து** வண்ணத்தெரிவுகள்:

conditions apply*

# இந்தியாவில் வேகமாக வளர்ந்து வரும் மின்சார வாகனம்

2 வருட உத்தரவாதம்

3 இலவச சேவைகள்

Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02

Hotline - 070 300 9555

# தேயிலை வர்த்தகம் தொடர்பாக சீனாவுடன் விசேட கலந்தாய்வு

சீனாவுக்கும் இலங்கைக்கும்இடையேதேயிலை வர்த்தகம்மற்றும்ஊக்குவிப்பு நடவடிக்கைகளைமேம்படுத்துவது தொடர்பாக பிரதமர் தினேஷ்குணவர்த்தனகலந்துரையாடியுள்ளார்.

பிரதமர் தினேஷ் குணவர்தன கடந்த 18 ஆம் திகதி சீனாவின் முன்னணி தேயிலை நிறுவனமான யுனான்சியாகுவான்டோச்சா நிறுவனத்தைபார்வையிட்டார்.

யுனான்டாலியில்அமைந்துள்ள இந்த தொழிற்சாலை தேயிலை விற்பனை, உற்பத்தி, மேம்பாடு மற்றும் ஆராய்ச்சிநடவடிக்கைகளை ஒருங்கிணைக்கிறது.

தேயிலை உற்பத்தியில் சர்வதேச நன்மதிப்பைப் பெற்றுள்ள சியாகுவான் டோச்சா நிறுவனத்துக்கும் இலங்கைக்கும் இடையில் தேயிலை ஆராய்ச்சி நடவடிக்கைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பாக அதன் தலைமை நிறைவேற்று அதிகாரி மற்றும் தேயிலை ஆராய்ச்சியாளர்களுடன் பிரதமர் கலந்துரையாடினார்.

தலவாக்கலைதேயிலை ஆராய்ச்சி நிலையத்துடன் ஏற்கனவே தரவுகள் மற்றும் நிபுணத்துவத்தை பரிமாறிக்கொண்டுள்ள யுனான் சியாகுவான்டோச்சாதொழிற்சாலை, இலங்கையில் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கு ஆதரவளிக்க விருப்பம் தெரிவித்துள்ளது.

தேயிலை ஆராய்ச்சியில் ஒத்துழைப்பு தொடர்பான மேலதிக கலந்துரையாடல்களுக்காக ஒரு குழுவை



இலங்கைக்கு அனுப்புமாறு பிரதமர் குறித்த தரப்பினரிடம் கோரிக்கை விடுத்தார்.

இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், நாடாளுமன்ற உறுப்பினர் யதாமினி குணவர்தன, பிரதமரின் செயலாளர்அனுரதிஸாநாயக்க உள்ளிட்டோரும் இந்த நிகழ்வில்கலந்துகொண்டனர்.(05)

# மன்னாரில் சாதனை படைத்த சிறுநீரகச் சிகிச்சைப் பிரிவு

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் அமைந்துள்ள சிறுநீரகச் சிகிச்சைப் பிரிவானது கடந்த ஐந்து வருடங்களாகச் சிறப்பாகஇயங்கிவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக வைத்தியர் சிசில் மற்றும் வைத்தியர் மல்ஷாவின் தலைமையின் கீழ் இயங்கிவரும் மன்னார் குருதி சிகிச்சை பிரிவில் தற்போது 60 சிறுநீரக நோயாளர்கள் சிறப்பான சிகிச்சையைப் பெற்று வருகின்றனர் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சிறுநீரக பிரச்சினைகளால் ஏற்படும் மரணங்களின் எண்ணிக்கையும் சடுதியாகக் குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அதுமட்டுமல்லாது மன்னார் மாவட்டத்தில் உள்ள ஐந்து பிரதேச செயலகங்களையும் உள்ளடக்கிய 140 கிராமங்களை சேர்ந்த மக்களும் இதனால் பயனடைந்து வருகின்றனர் எனவும், இதனால் குறித்த சிகிச்சைப் பிரிவின் தரம் மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவை தவிர்த்து பாம்பு கடி, சலரோகம், சிறுநீர் கிருமி தொற்று போன்றவற்றுக்கு சிகிச்சைக்காக வருகைதரும் அவசர நோயாளிகளுக்கான இரத்த சுத்திகரிப்பு சேவையையும் இங்கு மேற்கொள்ளப்பட்டுவருவதாகத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

(05)

# டக்ளஸைச் சந்தித்தார் கருணா!

கடலுணவுகளைத் தனியார்முதலீட்டாளர்களின் பங்களிப்புடன் ஏற்றுமதி செய்வது தொடர்பாக அமைச்சர்டக்ளஸ்தேவானந்தாவை முன்னாள் அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா அம்மான்) கடற்றொழில் அமைச்சில் நேற்று (திங்கட்கிழமை) சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பில் புலம்பெயர் நாடுகளைச் சேர்ந்த தனியார்முதலீட்டாளர்களின் பிரதிநிதிகள் குழுவினரும் கலந்து கொண்டனர்.

சர்வதேசசந்தைகளுக்கு கடலுணவுகளை ஏற்றுமதி



செய்வதன் மூலம் நாட்டுக்குத் தேவையான அந்நியச் செலாவணியை பெற்றுக் கொள்வதுடன், கடற்றொழில் சார்ந்த மக்களின் வாழ்வாதாரத்தையும் வலுப்படுத்த முடியும் எனவும் இந்தச் சந்திப்பின் போது அமைச்சர் டக்ளஸ் வலியுத்தியுள்ளார். (05)

# சுகாதார அமைச்சர் கெஹலியவுக்கு எதிராக முல்லைத்தீவில் கையெழுத்துப் போராட்டம்

சுகாதார அமைச்சர் கெஹலியரம்புக்வல்லவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்குவலுசேர்க்கும் கையெழுத்து போராட்டம் நேற்று (திங்கட்கிழமை) முல்லைத்தீவில்முன்னெடுக்கப்பட்டது.

சுகாதார அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்துக்கு வலு சேர்க்கும் கையெழுத்துப் போராட்டமும் விழிப்புணர்வு நடவடிக்கையும் முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புபிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலைக்கு முன்பாகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

நாட்டில் மருந்து தட்டுப்பாடு ஏற்பட வழி வகுத்த சுகாதாரஅமைச்சர்கெஹலியரம்புக்வெலவை மாற்றி மருந்து தட்டுப்பாட்டிற்கு தீர்வு காண வேண்டும் என சபாநாயகருக்கு வலு யுறுத்தும் வகையிலேயே இந்தப் போராட்டம் முன் னெடுக்கப்பட்டது. இதன்போது, துண்டு பிரசுரங்களும் பொது மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

ஐக்கிய மக்கள் சக்தியின்




முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் முத்து குமாரசாமி லக்சயன் தலைமையில் இந்த கையெழுத்துப் போராட்டம் இடம்பெற்றது.

இதில், புது குடியிருப்பு பிரதேசசபையின் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் சத்தியசுதர்சன், கட்சியின் ஆதரவாளர்கள் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (05)

# சிங்கப்பூர் பாதுகாப்பு அமைச்சரை சந்தித்துள்ளார் ஜனாதிபதி ரணில்

சிங்கப்பூருக்கு இருநாள் விஜயம் மேற்கொண்டிருக்கும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, சிங்கப்பூர் பாதுகாப்பு அமைச்சர் கலாநிதி நெங் எங் ஹென் ஐ சந்தித்துள்ளார்.

இதன்போது பூகோள அரசியல் மேம்பாடுகள் மற்றும் கடல்சார் நாடுகளின் பிராந்திய ஸ்திரத் தன்மையின் முக்கியத்



துவம் தொடர்பில் கலந்தாலோசிக்கப்பட்டதாகஜனாதிபதி ஊடகப்பிரிவுதெரிவித்துள்ளது. (05)

# மண்டோஸ் புயல் பாதித்தோருக்கு மெசிடோ நிறுவனத்தால் நிதியுதவி



மன்னார் மாவட்டத்தில் மண்டோஸ் புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஹமெசிடோ' நிறுவனத்தால் நேற்று (திங்கட்கிழமை) நிதியுதவி வழங்கப்பட்டது.

மண்டோஸ் புயலால் பாதிக்கப்பட்டு உரிய நிவாரணங்கள் கிடைக்கப் பெறாமல் வாழ்வாதாரத்தை இழந்து காணப்படும் 40 மீனவ குடும்பங்களுக்கே இவ்வாறு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட செயலகஜேக்காமண்டபத்தில் மெசிடோநிறுவனத்தின்பணிப்பாளர் ஜாட்சன் பிகிறாடோ தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலா 45 ஆயிரம் ரூபா பெறுமதியான வலைகள் உள்ளடங்களான மீன் பிடிப் பொருள்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் மெசிடோ' நிறுவன அதிகாரிகள் உட்பட பலரும் கலந்துகொண்டனர். (05)

# நுவரெலியா விபத்தில் அறுவர் படுகாயம்

நுவரெலியா தலவாக்கலை ஏ7 பிரதான வீதியில் கெப் ரக வாகனமொன்று வீதியைவிட்டு விலகி 50 அடி பள்ளத்தில் வீழ்ந்ததில் 6 பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்று(திங்கட்கிழமை) பிலியந்தலையிலிருந்து நுவரெலியா நகருக்கு பயணித்த கெப் ரக வாகனமொன்று வீதியைவிட்டு விலகியதால் குறித்த விபத்து ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வாகனத்தின் வேகத்தை கட்டுபடுத்த முடியாமல் போனதால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (05)

# நீதிமன்றில்மணல் ஏலவிற்பனை

கிளிநாச்சி மாவட்ட நீதிவான் மன்ற வளாகத்தில் ஒகஸ்ட் 25 மணல் ஏல விற்பனை இடம்பெறவுள்ளதாக நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தினால் அரசுடமையாக்கப்பட்ட மணலே ஏலம் மூலம் விற்பனை செய்யப்படவுள்ளது. முற்பகல் 9 மணிக்கு ஏலம் தொடங்கும். விற்கப்படவுள்ள மணலை ஏலம்தொடங்குவதற்கு அரை மணி நேரத்துக்கு முன்னர் பார்வையிட முடியும் என்று பதிவாளர் அறிவித்துள்ளார்.

(315)

# தவறான மருந்தால் பெண் ஒருவர் சாவு

தனியார் மருந்தகம் வழங்கிய தவறான மருந்தைஉட்கொண்டஹொரானஇங்கிரியவை சேர்ந்த நீரிழிவு நோயாளியொருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்தசம்பவத்தின்காரணமாகஹொரான வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த 62 வயது பெண்ணே உயிரிழந்துள்ளார்.

நீரிழிவு நோயாளிக்கு புற்றுநோய் மருந்தை மருந்தகம் வழங்கியதால் இந்த உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது. (05)

# தாயை கத்தியால் வெட்டி படுகொலை செய்த மகன்

குடும்பத் தகராறு காரணமாக மூன்று பிள்ளைகளின் தாய் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொடூர சம்பவம் கம்பஹா - திவுலப்பிட்டிய பிரதேசத்தில் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

குறித்த குடும்பப் பெண்ணை அவரின் மூத்த மகனே கத்தியால் கழுத்தறுத்துப் படுகொலை செய்துள்ளார்.

52 வயதுடைய பெண்ணே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

சந்தேகநபரான 27 வயதுடைய மகனைக் கைது செய்துள்ள பொலிஸார், சம்பவம் தொடர்பில் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சந்தேகநபர் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

# இரத்மலானையில் நேற்று ஒருவர் சுட்டுப் படுகொலை



தென்னிலங்கையில் நேற்று ஒருவர் சுட்டுப் படுகொலைசெய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு,இரத்மலானை ரயில்நிலையத்துக்குஅருகில் இடம்பெற்றதுப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவரால் இந்தத் துப்பாக்கிச் சூடுமேற்கொள்ளப்பட்டுள்ளது என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

உயிரிழந்த நபர் தொடர்பான மேலதிக விபரம் வெளியாகவில்லை.

# மூச்சுத் திணறலால் கைதி ஒருவர் சாவு



காலி சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சுவாசக் கோளாறு காரணமாக காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் அவர் நேற்று (20) உயிரிழந்துள்ளார்.

இறந்தவர் காலி சிறைச்சாலையின் சந்தேகநபர் 2840 இலக்கமுடைய 32 வயதுடையவர் ஆவார்.

மூச்சுத் திணறல் காரணமாக சிறைச்சாலை அதிகாரிகளால் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவர் கராப்பிட்டிய வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்தார்.

இறந்தவரின் பிரேத பரிசோதனை காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் நடைபெற்றது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.08.2023இல் வெளியிடப்பெற்றது.